2008 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை பேரூராட்சியில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி என இரண்டு பள்ளிகளிலும் சேர்த்து கிட்டத்தட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் படிக்கின்றார்கள். அங்கு எந்த விடுதியுமே கிடையாது. எனவே, ஆதி திராவிடர் மாணவர் விடுதி, மாணவியர் விடுதி எனத் தனித்தனியாக விடுதிகள் அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணலூர்பேட்டை பேரூராட்சியில் மாணவர் விடுதியும், மாணவியர் விடுதியும் கேட்டிருக்கின்றார்கள். மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப, எந்த விடுதி முதலில் அமைக்கப்பட வேண்டுமோ அதற்கேற்ப அங்கே இந்த நிதியாண்டில் விடுதி அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

[2008 மே 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்றையதினம் தெரிவித்துள்ளதன் அடிப்படையில் எடுத்துக்கொள்ள வேண்டியதை முதலில் எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடு) திரு. கே.ஏ. செங்கோட்டையன், என்ன?

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள விவசாய . . .

3. மதுரை மாவட்டம், உத்தபுரம் கிராமம், தடுப்புச் சுவர் பிரச்சினை—நல்லிணக்கத் தீர்வு மேற்கொண்ட முதலமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.ஏ. செங்கோட்டையன், ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், உசிலம்பட்டிக்கு அருகில் உத்தபுரம் கிராமத்தில் சுமார் 2 ஆயிரம் குடும்பத்தினர் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கு இரண்டு சமூகத்திற்கிடையில் ஏற்பட்ட பிரச்சினையில் 19 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டது. அந்தத் தடுப்புச் சுவரை ஒரு பிரிவினர் தங்களுடைய பாதுகாப்பிற்கானது என்று கூறி வந்தனர். இன்னொரு பிரிவினர் எங்களை இழிவுபடுத்தும்வகையில் அமைக்கப்பட்ட தீண்டாமைச் சுவர் என்று கூறி வந்தனர். இந்தப் பிரச்சினை நீண்ட நாட்களாக நீடித்து வந்தது. இதுகுறித்து, 19 நாட்களுக்கு முன்பு, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். உடனே, முதல்வர் அவர்கள் விசாரிக்க உத்தரவிட்டு, இன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு செய்து, இரண்டு சமூகத்தினரையும் அழைத்துப் பேசி, பாதுகாப்புக்காக சுவரும் இருக்கட்டும், பாதை செல்வதற்கு வழியும் இருக்கட்டும் என்று சொல்லி, அந்தச் சுவரை இடித்து, பாதையும் உருவாக்கி, சாலையும் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொண்டு, ஒரே இடத்தில் வாழ்கின்ற இரண்டு சமூகத்தினரும் ஒன்றுபட்டு சமூகமாக வாழ வேண்டும் என்ற சமத்துவ நோக்கத்துடன் எடுக்கப்பட்டிருக்கிற இந்த